22nd February 1969]

February 27th—(1) Reply to the debate on the Governor's Address.

(2) Consideration of Appropriation Bills.

February 28th—Holiday.

March 1st—Presentation of the Budget for 1969-70. Consideration of Official Bills.

Further programme will be decided later.

The Council will meet from 4 p.m. to 7 p.m. daily.

IV. CALLING ATTENTION TO DROUGHT CONDITIONS IN CHINGLEPUT DISTRICT.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR: Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Finance to a matter of urgent public importance, namely, the serious drought conditions almost bordering famine in the Chingleput District and the need to take relief measures by the Government to alleviate the conditions by way of remission of kist, postponement of collection of loans, etc., and the necessity for supply of foodgrains in the district.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Chairman, Sir, the South-West and the North-East Monsoons have failed in Chingleput district during 1968 with the result that the tanks have remained empty. Paddy crops could not therefore be raised in time and the ryots were thrown out of agricultural operations. Consequently the Commissioner of Land Revenue and Land Reforms had undertaken in the first half of December 1968 a tour of the worst affected areas in the district for a personal assessment of the situation and in the light of his finding the Government have approved the following relief works to the the time of Rs. 23.43 lakhs with a view to providing employment to the ryots in the affected parts of the district.

Owing to adverse seasonal conditions, the Collectors have applied for more relief measures. The Government observe that there has been general failure of rains in the State with the result that adverse seasonal conditions prevail not only in these two districts but also in other districts. Therefore the question of undertaking certain immediate measures in order to provide relief to ryots and agricultural labourers in all the drought affected parts of the State was considered at a high-level Conference held by the Chief Minister on the 17th February 1969. It was decided to provide more money for undertaking constructive items of work like minor irrigation works, repairs to Public Works Department tanks and supply channels, deepening of wells both for irrigation and drinking purposes and road works. The Government have accordingly sanctioned another Rs. 7.25 lakhs for Chingleput district for undertaking constructive items of work referred to above. In all, relief to the tune of Rs. 35.68 lakhs for Chingleput District has been provided.

[22nd February 1969

SRI N. R. THIAGARAJAN : On a point of order on the Governor's Address, Sir.

MR CHAIRMAN : Let me take up the subject first.

V. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

MR. CHAIRMAN : Now we will resume the discussion on the Governor's Address. There is an amendment given notice of by the hon. Member Thiru S. V. Lakshmanan, to the Address. He will move the amendment and speak on the Address.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த மந்திரி சபையின் கொள்கையை நிர்ணயிப்பதற்காக கவர்னர் பெருமான் அவர்கள் இங்கே உரை நிகழ்த்தினார்கள். ஆனால் இப்போது அந்த மந்திரி சபை மாறியதோடு, அதன் பின்னர் 7 நாட்களுக்கு ஒரு தாற்காலிக மந்திரி சபை ஒன்றும் பதவியில் இருந்து, தற்போது புதிதாக மூன்றாவது மந்திரி சபை வந்திருக்கிறது. ஆகவே முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பற்றியும், கீழ் வெண்மணி சம்பவத்தைப் பற்றியும் அதிலே பேச வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட நிலையில் தொடர்ந்து கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடத்துவது சரிதானா என்பது பற்றி தலைவர் அவர்கள் தகுந்த ரூலிங் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது அமைந்திருக்கிற அமைச்சரவை இதற்கு முன்பிருந்த அமைச்சரவையின் கொள்கைகளைப் பின்பற்றி நடைபெறுகிற அமைச்சரவை என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முன்பு ஒருமுறை திரு. இராஜாஜி அவர்கள் தலைமையில் அமைச்சரவை இருந்து, அந்த அமைச்சரவை மாறி திரு. காமராஜர் அவர்களுடைய தலைமையில் வேறொரு அமைச்சரவை உருவானபோது, இதைப் போன்ற ஒரு கேள்வி சட்ட மன்றத்தில் எழுந்தது. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அதற்கு பதில் அளிக்கிற நேரத்தில் அமைச்சரவை மாறினாலும் கொள்கை மாறுதல் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டு பழைய அமைச்சரவையின் கொள்கையின் அடிப்படையில் தான் இந்த அமைச்சரவையும் நடைபெறும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற நேரத்தில் நான் பத்திரிகைகளில் வெளியிட்ட அறிக்கையில் பழைய அமைச்சரவையின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே கவர்னர் அவர்களுடைய உரை அந்தக் கொள்கையினுடைய அடிப்படையில் அமைந்திருக்கிற காரணத்தால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய இந்த ஒழுங்குப் பிரச்னைக்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, முன்பு இராஜாஜி அவர்களின் மந்திரி சபைக்குப் பிறகு அடுத்த மந்திரி சபை உடனடியாக பதவியேற்று விவாதம் தொடர்ந்து நடத்தப்